# குண்டசாலை பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 செப்தெம்பர் 11 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது இவ்வறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள குண்டசாலை பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தற்காலிக நாணாவித வைப்புக்களின் கீழ் ரூபா 467,293 தொகையான மீதி உரிய செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதும் இன்னும் தீர்க்கப்படாத வைப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான ஓய்வூதிய நிலுவைப் பங்களிப்புப் பணமான ரூபா 417,948 தொகை கணக்குகளில் முழுமையாகக் கைவிடப்படாமையினால் அப் பெறுமானத்தினால் செலவினம் மற்றும் கடன் கொடு:த்தோர் என்பன குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) ரூபா 3,233,869 தொகையான உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மீதி காண்பிக்கப்படாமையினால் கடன்கொடுத்தோர் அப் பெறுமானத்தினால் குறைவாகக் காண்பிக்கப்படாமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட 151 காணி மற்றும் கட்டிட விடயங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,727,344 ஆக இருந்ததுடன் அதற்குரிய துணைப் பதிவேடுகள் / அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,277,336 ஆக இருந்தது.

(ஊ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கிலுள்ள வரவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,766 ஆக இருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

#### கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 226,454,393 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 28,157,554 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,140,122 ஆக இருந்தது.

### 2.2 நிதிக்கட்டுப்பாடு

பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1999 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 மார்ச் வரை சபையில் வைப்புச் செய்யப்பட்டிருந்தும் தேறாத ரூபா 376,000 பெறுமதியான 44 காசோலைகள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 188(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் பேணப்பட்ட 02 நடைமுறைக் கணக்குகளில் விநியோகிக்கப்பட்டு 6 மாதங்களைக் கடந்திருந்தும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 79,378

பெறுமதியான 05 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமானம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 23,444 | 17,428 | 8,644 |
| (ii) | வாடகை | 10,450 | 3,377 | 2,488 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,486 | 3,004 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 24,720 | 25,428 | 3,081 |

### 2.3.2 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 1,032,209 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 15,361,798 |

### 2.3.3 கடை வாடகை

(i) 2007 ஆம் ஆண்டின் போது சபையின் கடை வாடகைக்கான மதிப்பீடு பெறப்பட்டிருந்த போதிலும் அந்த மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வாடகை கணிப்பீடு செய்யப்படாமையினால் 2008 தொடக்கம் 2011 வரையான காலத்தில் சபையினால் ரூபா 3,381,600 அளவிலான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ii) மெனிக்கஹின்ன பொதுச் சந்தையில் திகன ரணவிறு வீதி, கிரிமெட்டிய சந்தி மற்றும் பஸ் நிலையங்களின் கடைகளை வாடகைக்கு விடும் போது கொள்வனவு வழிகாட்டி பின்பற்றப்படாதிருந்ததுடன் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ரூபா 830,522 தொகை நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கும் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 விளம்பரப் பதாதைக் கட்டணம்

2011 ஆம் ஆண்டின் போது சபை அதிகாரப் பிரதேசத்தில் விளம்பரப் பதாதைக் கட்டணம் அறவிடுவதற்கான உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 தொலைத்தொடர்பு பரிவர்த்தனை கோபுரக் கட்டணம்

நகர அபிவிருத்தி அமைச்சரின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் 06 ஆம் படடோலையின் பிரகாரம்,

(i) சபை எல்லையில் அமைக்கப்பட்டிருந்த 06 தொலைத் தொடர்பு பரிவர்த்தனை கோபுரங்களுக்கான திட்டம் அங்கீகரிக்கப்படாமல் அனுமதியற்ற வகையில் நிர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அந்த அனுமதியற்ற கோபுரங்களிற்கான ஒவ்வொரு 5 மீற்றர் உயரத்திற்கும் அறவிட வேண்டிய ரூபா 10,000 படியான கட்டணம் கணிப்பீடு செய்யப்பட்டு உரிய கம்பனிகளிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த 12 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காக சபைக்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 276,000 தொகையான அபிவிருத்தி அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள 13 தொலைத் தொடர்பு கோபுரங்களின் ஒளிபரப்பு அன்டனாவின் அளவின் பிரகாரம் வருடாந்த வியாபார

அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய போதிலும் அவ்வாறு பெறாமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 272,000 தொகை இழக்கப்பட்டிருந்தது.

### 2.3.6 இறைச்சிக் கடை வாடகை

சபைக்குரிய இறைச்சிக் கடையை மீளாய்வாண்டின் போது வாடகைக்கு விடும் போது கொள்வனவு வழிகாட்டி பின்பற்றப்படாது ஒரு நபருக்கே தொடர்ந்தும் வழங்கப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 1 ஆம் இலக்க மாட்டிறைச்சி விற்பனைக் கடையில் நிலுவை வாடகை ரூபா 1,944,925 ஆக இருந்தது. எஞ்சிய இறைச்சிக் கடைகளின் நிலுவைப் பணம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட கிடைக்கவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 7,932,891 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் நூலக உதவியாளர் மற்றும் 02 வீதித் தொழிளாளர் பதவிகள் மாத்திரம் வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும் 2011 ஆம் ஆண்டின் போது அமைய மற்றும் நாட்கூலி அடிப்படையில் 46 பேர் சேர்க்கப்பட்டு சம்பளமாக ரூபா 6,467,366 தொகை செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) சபையின் நிரந்தர பதவியணியினருக்காக மீளாய்வாண்டின் போது சம்பளமாக ரூபா 15,021,574 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 13,747,497 தொகை மாத்திரமே மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஊ) களஞ்சியக் கட்டுப்பாடு